இனிமையான குழந்தைகளே! தந்தை நம்மை திரும்ப அழைத்துச் செல்வதற்காக வந்திருக்கின்றார், இப்பொழுது அனைவரும் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற இந்த ஆன்மீகப் பெருமையில் எப்பொழுதும் இருங்கள்.

கேள்வி: குழந்தைகளாகிய நீங்கள் இந்த சமயம் அனைத்தையும் விட பெரியதிலும் பெரிய புண்ணியம் என்ன செய்கிறீர்கள்?

பதில்: தனது அனைத்தையும் சிவபாபாவிற்கு முன் சமர்ப்பணம் செய்வது, இதுவே மிகப்பெரிய புண்ணியம் ஆகும். சமர்ப்பணம் செய்து பிறகு முழுமையாக ஸ்ரீமத்படி நடப்பதன் மூலம் தான் மிக உயர்ந்த பதவி கிடைக்கிறது.

கேள்வி: எந்த ஒரு புதுவிசயம் மனிதர்களின் புத்தியில் தங்குவது மிகவும் கடினமாக உள்ளது?

பதில்: சிவபாபா, நிராகாரமானவர், அவர் பிரம்மாவின் உடலில் பிரவேசம் செய்திருக்கின்றார், அவரே அனைவரையும் விட பெரியதிலும் பெரிய ஆசாமி ஆவார். அவருடையது தான் உயர்ந்ததிலும் உயர்ந்த நடிப் பாகும், இந்த புதிய விசயம் மனிதர்களின் புத்தியில் தங்குவது மிகவும் கடினமாக உள்ளது.

பாடல்: இன்று அதிகாலையில் யார் வந்தது......

ஓம்சாந்தி. சிவபாபா தனது குழந்தைகளுக்கு நேரில் வந்து புரிய வைக்கின்றார், சிவபாபா நிராகார மானவர் மற்றும் ஆத்மாக்களாகிய நாமும் நிராகாரமானவர்கள் என்று குழந்தைகள் புரிந்து கொண்டனர். அவர்களுக்குத் தான் அமர்ந்து புரிய வைக்கின்றார். ஒரு தந்தையிடம் மட்டுமே இந்த யுக்தி உள்ளது. தந்தை அமர்ந்து புரிய வைக்கின்றார், பகவான் யாருடன் உரையாடுகின்றார்? தனது குழந்தைகள், ஆத்மாக்களுடன் உரையாடுகின்றார். குழந்தைகளும் அறிந்துள்ளீர்கள் மற்றும் தந்தையும் அறிவார். ஆத்மா சரீரம் இல்லாமல் எதையும் கேட்க இயலாது. சரீரத்தின் மூலம் தான் கேட்கிறது. இந்த ஒரு சத்சங்கத்தில் தான் பரமபிதா பரமாத்மா அமர்ந்து புரிய வைக்கின்றார். மற்றபடி அனைத்து ஆத்மாக்களையும் இப்பொழுது உடன் அழைத்துச் செல்ல வேண்டும். ஏனெனில், நாடகச் சக்கரம் இப்பொழுது முடிவடைந்துவிட்டது. இது அனைத்துமே பாரதவாசி களுடைய விசயம் ஆகும். பாபா பாரதத்தில் தான் வருகின்றார் மற்றும் பாரதவாசிகளுக்குத் தான் கூறுகின்றார் - குழந்தைகளே நீங்கள் அனைவரையும் விட அதிக நடிப்பு நடித்திருக்கிறீர்கள். நீங்களே சத்யுகத்தில் தேவி தேவதைகளாக இருந்தீர்கள். இப்பொழுது சூத்திரர்கள் ஆகிவிட்டீர்கள். உங்களுக்கு மீண்டும் கற்பித்து தேவி தேவதை ஆக்குகிறேன். பிறருக்கு எவ்வாறு கற்பிப்பேன்? கீதையும் கூட பாரதத்தினுடையது ஆகும். ஒவ்வொருவருக்கும் அவரவர் மத சம்மந்தப்பட்ட புத்தகம் உள்ளது. மேலும், யாரெல்லாம் தர்ம பிதாக்கள் வந்திருக்கின்றனரோ அவர்கள் அனை வரும் மனிதர்கள் ஆவர். அவர்களுக்கு அவரவர் சரீரம் உள்ளது. இவர் அனைத்து ஆத்மாக்களின் நிராகார தந்தை, ஞானம் நிறைந்தவர் (நாலெட்ஜ்புல்) ஆவார். நாடகத்தின் முதல், இடை, முடிவை அறிந்திருக்கின்றார். குழந்தைகளாகிய உங்களுக்குத் தான் தந்தை கற்பிக்கவும் வேண்டும். ஏனெனில், நீங்களே மீண்டும் சக்கரவர்த்தி இராஜா ஆகப்போகிறவர்கள் ஆவீர்கள். அனைவரும் மனிதனிலிருந்து தேவதை ஆவதில்லை. யாரெல்லாம் முன்பு தேவி தேவதை

தர்மத்தினராக இருந்தார்களோ, பிறகு அவர்களுடைய நாற்று நடப்படும். எப்பொழுது தேவி தேவதை தர்மம் முழுமையாக ஸ்தாபனை ஆகிவிடுமோ, பின்னர் மற்ற மடங்கள், சமயங்கள் வினாசமடையும். அனைத்து ஆத்மாக்களையும் தந்தை திரும்ப அழைத்துச் செல்வார். தந்தை வருவதே தூய்மை இல்லாத உலகத்தில் தான், வருவதும் அனைவரையும் திரும்ப அழைத்துச் செல்வதற்காகவே ஆகும். எந்த எளிய இராஜயோகத்தை நாம் கல்பத்தின் முன்பும் கற்றிருந்தோமோ அதை இப்பொழுது மீண்டும் கற்றுக்கொண்டு இருக்கிறோம் என்பதை குழந்தைகள் அறிவீர்கள்.

வினாசம் அருகாமையில் வரும்பொழுது அனைவரின் கண்கள் திறக்கும். பரமபிதா பரமாத்மாவின் பிரவேசம் இந்த உடலில் ஏற்படுகிறது என்பதை இப்பொழுது நீங்கள் மட்டும் தான் நம்புகிறீர்கள். வழிகாட்டி மற்றும் விடுவிப்பவர் வருவார், அனைவரையும் துக்கத்திலிருந்து விடுவித்து அழைத்துச் செல்வார் என்று பாடவும் செய்கின்றனர். இந்த பிரம்மாவில் பரமபிதா பரமாத்மா பிரவேசம் செய்திருக்கின்றார். இவர் எவ்வளவு பெரியதிலும் பெரிய ஆசாமி ஆகிவிட்டார். குழந்தைகளாகிய நீங்கள் தந்தை நம்மை அழைத்துச் செல்ல வந்திருக்கின்றார் என்று அதிக ஆன்மீகப் பெருமையில் இருக்க வேண்டும். என்னை நினைவு செய்யுங்கள் என்று கூறுகின்றார். அந்த மரியாதையோடு சிலர் பார்ப்பதில்லை. பகவானின் மகிமை எவ்வளவு உள்ளது! அவரே சர்வ சக்திவான் ஆவார். வேறு எவருக்கும் இந்தளவு மகிமை கிடையாது. குழந்தைகளாகிய நீங்கள் அந்தளவு மரியாதை வைத்திருக்க வேண்டும். எப்பொழுது நீங்கள் குழுவில் அமர்கிறீர்களோ அப்பொழுது நினைவு நன்றாக இருக்கிறது. பின்னர், இங்கு அங்கு செல்லும்பொழுது அந்த நினைவு இருப்பது கடினமாகிவிடுகிறது. அடிக்கடி தன்னை ஆத்ம அபிமானி எனப் புரிந்து கொள்ளுங்கள், அப்பொழுது தான் தந்தையை நினைவு செய்ய இயலும். இவ்வாறு தந்தையிடம் மிகுந்த மரியாதை யுடன் நடந்து கொள்ள வேண்டும். ஆனால், பாபா சாதாரணமாக இருக்கும் காரணத்தினால் மரியாதை இருப்பதில்லை. பாபா காலனுக்கெல்லாம் காலன் என்றும் புரிந்திருக்கின்றனர். இந்த சிவபாபா, யாரை நீங்கள் பாப்தாதா என்று கூறுகிறீர்களோ, அவர் அனைவரையும் உடன் அழைத்துச் செல்வார். பாபாவிற்கு உயர்ந்ததிலும் உயர்ந்த நடிப்பு கிடைத்திருக்கிறது. அவரை முழு உலகமும் நினைவு செய்கிறது. ஆத்மா என்றால் என்ன என்பதை வேறு எவரும் கூறமுடியாது. லிங்கம் உள்ளது என்று கூறுகின்றனர். சிவலிங்கத்தின் பூஜை நடைபெறுகிறது. நாம் கூட ஜோதிர்லிங்கம் என்று எழுதுகின்றோம். ஆனால், உண்மையில் இவ்வளவு பெரியது கிடையாது. இவர் நட்சத்திரம் போல் உள்ளார். இதில் தான் அனைத்து நடிப்பும் நிறைந் துள்ளது. இது கூட யாருடைய புத்தியிலும் தோன்றாது. எப்பொழுது, ஆத்மா நட்சத்திரம் போன்றது, பரமாத்மாவும் நட்சத்திரம் போன்றவரே மற்றும் யார் முழுமையான 84 பிறவிகள் எடுக்கிறாரோ அவருக்குள் அந்த சக்திவான் பிரவேசம் செய்கின்றார்; அவருக்குள் இருந்து கொண்டு நீங்கள் ஆத்மா, உங்களுடைய 84 பிறவிகள் இப்பொழுது முடிவடைந்துவிட்டன, இப்பொழுது என்னை நினைவு செய்தீர்கள் என்றால் விகர்மங்கள் வினாசம் ஆகிவிடும் என்ற முழு ஞானம் கொடுக்கின்றார் என்பதைக் கேட்கும்பொழுது ஆச்சரியப்படுவார்கள்.

இப்பொழுது குழந்தைகளுக்கு ஆத்மா எவ்வளவு சிறிய புள்ளியாக உள்ளது,

அதில் 84 பிறவிகளின் நடிப்பு உள்ளது, அதை அதன் நேரப்படி துல்லியமாக திரும்ப நடந்தே ஆகவேண்டும் என்ற எண்ணம் வருகிறது. ஆனால், அனைவரையும் விட உயர்ந்ததிலும் உயர்ந்த பாகம் சிவபாபாவினுடையது ஆகும். எவ்வாறு நாடகத்தில் இராஜா இராணிக்கு உயர்ந்த பாகம் கிடைக்கிறது அல்லவா. இதுவும் கூட உருவான உருவாக்கப்பட்ட நாடகம் ஆகும், அது மறுபடியும் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. மேலும், உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தைக்கு உயர்ந்ததிலும் உயர்ந்த பாகம் கிடைத் திருக்கிறது என்பதையும் குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். உங்களுக்கும் முழு எல்லையற்ற நாடகம் புத்தியில் உள்ளது. பாபா, பரம் ஆத்மா எவ்வாறு சாதாரண உடலில் பிரவேசம் செய்கின்றார். சாஸ்திரங்களில் அர்ஜுனரின் ரதமாக குதிரை வண்டியைக் காண்பித்துவிட்டார்கள். ரதம் என்பதன் அர்த்தம் எவ்வளவு உயர்ந்தது! இவர் அவருடைய ரதம் ஆவார். நான் இவருக்குள் பிரவேசம் செய்து உங்களுக்கு அனைத்து விசயங்களையும் புரிய வைக்கின்றேன் என்று சிவபாபா சுயம் கூறுகின்றார். இந்த ஞானத்தின் விசயங்கள் எந்த சாஸ்திரம் போன்றவற்றில் கிடையாது. சிவபாபா பிரம்மா உடலில் பிரவேசம் செய்திருக்கின்றார். இது முற்றிலும் புதிய விசயமாக இருக்கும் காரணத்தினால் யாருடைய புத்தியிலும் தங்குவதில்லை. குழந்தைகளே, ஆத்ம அபிமானி ஆகுங்கள் என்று இப்பொழுது தந்தை கூறுகின்றார். இப்பொழுது உங்களுக்கு பரமபிதா பரமாத்மா கற்பிக்கின்றார், அவரைத் தான் நினைவு செய்ய வேண்டும், அவர் இந்த உடலில் இருக்கின்றார். இவரையோ நீங்கள் தாதா என்று அழைத்தீர்கள். இந்த பாப்தாதா இருவரும் இணைந்து இருக்கின்றனர். நீங்கள் பாப்தாதா என்று அழைக்கிறீர்கள் அல்லவா. முதலில் தந்தை பிறகு தாதா. பின்னர் இவர் உங்களுடைய தாயாகவும் இருக்கிறார். இந்த ஆழமான விசயங்களைப் புரிய வைக்கின்றார். இவர் பிரம்மபுத்திரா நதி ஆவார். இவர் கடல் அல்ல. பெரியதிலும் பெரிய நதி என்று இவரை சொல்லலாம். பின்னர் சரஸ்வதி உள்ளார். நீங்கள் ஞானக்கடலிலிருந்து வெளிப் பட்ட ஞான கங்கைகள் ஆவீர்கள். அவர்கள் பின்னர் அதை சித்திரமாக வடித்துவிட்டனர். பிரம்மா புத்திரா எங்கிருந்து வெளிப்பட்டது என்பது அவர்களுக்கு என்ன தெரியும்? பின்னர், சிந்து சரஸ்வதியின் பெயரும் உள்ளது. ஏதாவது சில கருத்துக்கள் சாஸ்திரங்களிலும் கொஞ்சம் உள்ளது. ஆத்மா தான் தூய்மையாகவும், ஆத்மா தான் தூய்மையற்றதாகவும் ஆகின்றது. சரீரத்திற்காகச் சொல்லப்படுவதில்லை, ஆத்மாவிற்காக சொல்கின்றனர். இந்த சமயத்தில் அனைவரும் தூய்மை யற்று உள்ளனர். சரீரமோ, எவருடையதுமே தூய்மையாக இல்லை. அனைவரும் பாவ ஆத்மாக் களாக உள்ளனர். அனைவரையும் விட அதிக புண்ணிய ஆத்மாவாக நீங்களே ஆகின்றீர்கள். அனைத்தையும் சிவபாபாவிற்கு சமர்ப்பணம் செய்விப்பவர்கள் அதிகமாக உள்ளனர். பேராசையை சமர்ப்பணம் செய்யுங்கள், அனைத்தையும் விட்டுவிடுங்கள். இங்கே நீங்கள் பாபாவினுடையவர் ஆகிவிட்டீர்கள் என்றால் அனைத்தையும் தந்தைக்கு சமர்ப்பணம் செய்கிறீர்கள். பாபா பின்னர் கைம்மாறு அளிக்கின்றார். யார் எந்தளவு ஸ்ரீமத்படி நடக்கின்றார்களோ, சமர்ப்பணம் செய் கின்றார்களோ, அந்தளவு அவர்களுக்கு பதவியில் ஸ்தானம் கிடைக்கிறது. முக்கியமானது சிவபாபாவை நினைவு செய்வது ஆகும். சிவபாபா இங்கு கற்பிப்பதற்காக வருகின்றார். முழுநாளும் இவருக்குள் இருந்து விடமாட்டார். ஒரு நொடிக்கான விசயம் ஆகும். நீங்கள் நினைவு செய்யுங்கள், வந்துவிடுவார். பாபா எப்பொழுதும் இங்கேயே இருக்கின்றார் என்று நீங்கள் புரிந்திருப்பீர்கள்,

ஆனால், சுயம் இவரே மறந்து விடுகின்றார். நான் அனைவரையும் அழைத்துச் செல்வதற்காக வந்திருக்கின்றேன் என்று இந்த சமயம் சுயம் தந்தை கூறுகின்றார். வினாசம் அவசியம் ஏற்பட வேண்டும் என்று விவேகம் கூட சொல்கிறது. இப்பொழுது மனிதர்கள் அதிகம் ஆகிவிட்டனர். வினாசத்திற்கான ஏற்பாடுகள் நன்றாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதையும் நீங்களே அறிந்திருக்கிறீர்கள். மற்றபடி பிற அனைத்தும் வினாசம் ஏற்படும் என்று கூறுவார்கள், ஆனால், அதன் பின்னர் என்ன ஆகும் என்பதை அறியமாட்டார்கள். பாபா வந்திருக்கின்றார், இராஜ்யம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது என்பதை உங்களிலும் வரிசைக்கிரமமாகவே அறிந்திருக் கிறீர்கள். நாம் பாபாவுடன் சேவையில் உதவி யாளராக இருக்கிறோம். முட்களை மலர்கள் ஆக்கிக் கொண்டு இருக்கிறோம். பக்தி மார்க்கத்தினர் தந்தையை அறியவே இல்லை. சாஸ்திரங்களைப் படிப்பதால் பரமாத்மாவை சந்திக்கும் வழி கிடைக்கிறது என்று ஒருவேளை கூறினால், சென்று சேர்ந்திருக்க வேண்டும். ஆனால், யாரும் பரந்தாமத்திற்குத் திரும்பிச் செல்லவே இல்லை என்று தந்தை கூறு கின்றார். புதிய உலகம் பிறகு புதியதாக உருவாகும் என்று சிலர் புரிந்திருக்கின்றனர். உலகத்தில் அனேகக் கொள்கைகள் (வழிகள்) உள்ளன. இவை அனைத்தும் அசத்திய மானது என்று தந்தை கூறுகின்றார். சத்தியம் உரைப்பவர் ஒரே ஒரு தந்தை ஆவார். சத் ஸ்ரீ அகால மூர்த்தி என்று கூறுகின்றனர். அனைத்து ஆத்மாக்களும் அகால (அழிவற்ற) மூர்த்திகள் ஆவர். எனினும் சத் ஸ்ரீ அகால் (சத்தியமானவர், அழிவற்றவர்) ஒருவர் ஆவார். மற்ற அனைத்தும் அசத்தியம் அதாவது பொய் ஆகும். சத்தியம் என்று ஞானத்தின் விசயங்களுக்காகவே சொல்லப்படுகிறது. ஈஸ்வரனைப் பற்றி என்ன ஞானம் அளிக்கின்றனரோ, அவை அனைத்தும் பொய் ஆகும். இறை ஞானத்தை ஒரு இறைவன் தான் வந்து அளிக்கின்றார். இந்த நாடகம் முடிவடைகிறது, இப்பொழுது நாம் திரும்பச் செல்ல வேண்டும் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் நினைவில் வைத்திட வேண்டும். எவ்வாறு நாடகத்தின் முடிவு வரும்பொழுது நடிகர்கள், இப்பொழுது நாடகம் முடிந்து விடும் நாம் அனைவரும் வீட்டிற்குச் சென்றுவிடுவோம் என்று புரிந்திருப்பார்கள். நாம் அனைவரும் நடிகர்கள் ஆவோம். எனவே, இப்பொழுது இன்னும் குறைவான சமயமே உள்ளது என்ற ஞானம் நமக்கும் தெரிந்திருக்க வேண்டும். பாபா வந்திருக்கின்றார், ஆத்மாக்களாகிய நம் அனைவரையும் அழைத்துச் செல்வார். ஆனால், எப்பொழுது அழைத்துச் செல்வார் என்பதைக் கூறவில்லை, ஏனெனில், நாடகம் அல்லவா. திடீரென அனைத்தும் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். எவ்வளவு முடியுமோ பிறருக்கும் இந்த அறிவுரையை வழங்க வேண்டும். இது சரியானது என்று அவர்கள் அந்தளவு புரிந்து கொள்வதில்லை, ஆனால் சொல்லக் கூடியவர்கள் அவசியம் புரிந்திருப் பதனாலேயே கூறுகிறார்கள் அல்லவா. எல்லைக்குட்பட்ட தந்தையிடமிருந்து ஜென்ம ஜென்மங் களாக ஆஸ்தியைப் பெற்று வந்திருக்கிறீர்கள், இப்பொழுது எல்லையற்ற தந்தையிடமிருந்து ஆஸ்தியைப் பெறுங்கள் என்று குழந்தைகளாகிய நீங்கள் புரிய வைக்க வேண்டும். யார் கல்பத்திற்கு முன்னர் பெற்றிருப்பார்களோ அவர்களுக்கே ஞான அம்பு தைக்கும். குழந்தைகளாகிய நீங்கள் அடிக்கடி நினைவு செய்யுங்கள். இப்பொழுது நாம் சாந்திதாம வீட்டிற்குச் செல்ல வேண்டும். அரசு அலுவலர்கள் 8 மணி நேரம் சேவை செய்கின்றனர், நீங்களும் கூட 8 மணி நேரம் வரை இந்த நினைவு யாத்திரையை அதிகரிக்க வேண்டும். இறுதியில் நீங்கள் 8 மணி நேரம் இந்த சேவையில் இருப்பீர்கள்,

அப்பொழுதே முழுமையாக ஆஸ்தியைப் பெறுவீர்கள். அனைவருமே செய்ய இயலாது. சிலர் தீவிரமாக முயற்சி செய்கின்றனர், ஆனால், பின்னர் களைப்படைந்து விடு கின்றனர். இலட்சியம் மிக உயர்ந்தது ஆகும்.

தந்தை அனைத்து ஆத்மாக்களையும் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதைக் குழந்தைகளாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். அவ்வப்பொழுது இந்த பிரம்மாவிற்கும் கூட, போதும், இப்பொழுது அனைவரையும் திரும்ப அழைத்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் வருகிறது. பாபாவின் சமஸ்காரம் இவருக்குள் நிறைந்து கொண்டிருக்கின்றது. இவரும் முயற்சியாளர் ஆவார். இப்பொழுது விளையாட்டு முடிவுறுகிறது, அனைவரும் திரும்பிச் செல்ல வேண்டும். ஒருவேளை இதை யாராவது நினைவு செய்தாலும் கூட, அதை மன்மனாபவ என்று சொல்லப்படுகிறது. குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது எதிரில் அமர்ந்திருக்கிறீர்கள். எதிரில் இருந்து கேட்பதனால் அச்சடிக்கப்பட்டது போல் ஆகிவிடுகிறது. இப்பொழுது திரும்பிச் செல்ல வேண்டும் என்பதை அடிக்கடி நினைவு செய்து கொண்டே இருங்கள். உங்களுக்கு இப்பொழுது மரணத்தின் பயம் நீங்கி விட்டது. மரணத்தைக் கண்டு ஒருபொழுதும் தயங்கக் கூடாது. ஆத்ம அபிமானி ஆகவேண்டும். ஆத்ம அபிமானியே சேவை நன்றாக செய்ய இயலும். ஞான சொரூப ஆத்மா தேவை. கண் காட்சியில் காட்சியைப் பார்ப்பவரின் சேவை தேவையில்லை, ஞானியே தேவை. ஞான சொரூப ஆத்மா தான் பிரியத்திற்கு உரியவர் ஆவார். நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்காக தாய், தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிக தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. புதிய இராஜ்யத்தை உருவாக்குவதற்காக தந்தையின் சேவையில் உதவியாளர் ஆகவேண்டும். முட்களை மலர்களாக ஆக்கக்கூடிய சேவை செய்ய வேண்டும்.

2. குறைந்ததிலும் குறைந்தது 8 மணி நேரம் நினைவு யாத்திரையில் இருப்பதற்கான பயிற்சி செய்ய வேண்டும். மரணத்தைக் கண்டு தயங்கக் கூடாது, ஏனெனில் இப்பொழுது வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்பது புத்தியில் உள்ளது.

வரதானம் : தன்னை விசேஷமான நடிப்பை நடிக்கக்கூடியவன் எனப் புரிந்துக் கொண்டு சாதாரணத்தன்மையை முடிக்கக் கூடிய பரம (உச்சம்) மற்றும் சிரேஷ்டமானவர் ஆகுக.

பாபா எப்படி பரம (உச்ச நிலையிலிருக்கும்) ஆத்மாவாக இருக்கிறாரோ, அதுபோல விசேஷமான நடிப்பு நடிக்கக்கூடிய குழந்தைகளாகிய நீங்களும் கூட ஒவ்வொரு விஷயத்திலும் உச்ச நிலை யிலிருக்கும் மற்றும் உயர்ந்தவர்களாக இருக்கிறீர்கள். நடந்தாலும், சுற்றினாலும், சாப்பிடும் பொழுதும், நீர் அருந்து பொழுதும் தன்னை விசேஷமான நடிப்பு நடிக்கக்கூடியவன் எனப் புரிந்துக் கொண்டு நாடகம் என்ற மேடையில் நடிப்பை நடியுங்கள். ஒவ்வொரு நேரமும் தனது செயல் என்ற நடிப்பின் மீது கவனம்

செலுத்துங்கள். விசேஷமான நடிப்பு நடிக்கக் கூடியவர்கள் ஒருபொழுதும் அலட்சியமாக இருக்க முடியாது. ஒருவேளை விசேஷமான நடிப்பு நடிக்கக் கூடியவர்கள் சாதாரண நடிப்பு நடிக்கிறார்கள் என்றால் அனைவரும் சிரிப்பார்கள், ஆகையால் ஒவ்வொரு அடியிலும், ஒவ்வொரு எண்ணத்திலும், ஒவ்வொரு நேரமும், விசேஷமாக இருக்கிறது, சாதாரணமானதாக இருக்கக் கூடாது.

சுலோகன்: தனது உள்ளுணர்வை சக்திசாலியாக மாற்றிவிட்டால்,

சேவையில் இயல்பாகவே வளர்ச்சியடைந்துவிடும்.

மாதேஷ்வரி அவர்களின் விலைமதிப்பு வாய்ந்த மகாவாக்கியங்கள் -

நிரந்தர நினைவு அதாவது முழு ஆர்வத்துடன் நினைவில் இருத்தல்: - பாருங்கள், பரமாத்மாவின் கட்டளை - என்னை நிரந்தரமாக நினைவு செய்யுங்கள், இப்பொழுது நிரந்தரம் என்ற வார்த்தைக்கும் இரகசியம் புரிய வைக்க வேண்டியிருக்கிறது. நிரந்தரம் என்று சொல்லப்படுவது - அவர்களுக்கு உள்ளுக்குள் வேறு எந்த நினைவும் இருக்காது, தொடர்ந்து நினைவில் இருப்பதாகும், அந்த நினைவில் துண்டிப்பு ஏற்படாது. அதைத் தான் துண்டிக்கப்படாத நினைவு என்று சொல்லப் படுகிறது. ஒருவேளை என்னை நிரந்தரமாக நினைவு செய்வீர் களேனால், உங்களால் செய்யப்பட்ட அனைத்து விகர்மங்களையும் சாம்பல் செய்துவிடுகிறேன் என்று இப்பொழுது பரமாத்மா உறுதிமொழி செய்கிறார். எனவே இந்த யோக அக்னியினால் விகர்மங்கள் எரிந்துவிடுகிறது. இந்த தந்தை தர்மராஜாவாகவும் இருக்கும் பொழுது அவர் தண்டனைகள் மூலம் விகர்மங்களை வினாசம் செய்ய முடியும். எனவே பாபாவிடம் அன்பு செய்யும் விதம் கூட இருக்கிறது. அதனால் யார் அவருடைய ஞான விஷயங்களை நடைமுறையில் கொண்டு வருகிறார்களோ, அவர்கள் குழந்தைகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு கட்டளை பிறப்பிக்கிறார் - குழந்தைகளே, மன்மனாபவ, நிரந்தரமாக என்னை நினைவு செய்வதின் மூலம் உங்களுடைய விகர்மங்கள் மீது வெற்றி அடையலாம். தர்மராஜரின் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பாக இருக்க முடியும். பரமாத்மாவிடம் விகர்மங்களை வினாசம் செய்வதற்காக இரண்டு வழிமுறைகள் இருக்கின்றன - ஒன்று தண்டனைகள் மூலம் தூய்மையாக மாற்றும் முறை - மற்றொன்று யோகத்தின் மூலம் தூய்மையாவதற்கான முறை. இதனால் பாவங்கள் நாசம் ஆகிறது, மேலும் ஜீவன்முக்தி பதவி அடைகிறோம். துக்கம் நிறைந்த உலகத்திலிருந்து விடுபடுவதற்காக பரமாத்மாவின் நினைவை தவிர வேறு எந்தவித உபாயமும் இல்லை. நல்லது - ஓம்சாந்தி.